**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (கடன் இல. 2947 எஸ்ஆர்ஜ மற்றும் 2948 எஸ்ஆர்ஜ) - 2013**

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947 எஸ்ஆர்ஜ மற்றும் 2948 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட மற்றும் கடன் உடன்படிக்கையின் 2.10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (என்டபிள்யூஎஸ்டிபி) தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு நகரத்தில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டமானது கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமையை புனரமைப்பதிலும் விரிவாக்குதலும் கொழும்பு நகரத்தில் வருமானமற்ற நீரைக் குறைத்தல், கொழும்பு பெரும்பாகத்தில் கழிவு நீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் சேவை வழங்குநரின் இயலளவு, முகாமை, அமுலாக்கல் முதலீடு என்பவற்றின் நிறுவனரீதியான உட்கட்டமைப்பை மற்றும் சேவை இயலளவை வலுப்படுத்தல் என்பவற்றினை எதிர்பார்க்கப்பட்டன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 112 மில்லியனாகும் அதில் ஐ.அ.டொலர் 84 மில்லியன் அல்லது 75 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஏடிபீ) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 யூன் 28 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக்

கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

4. நிதிக்கூற்றுக்கள்

4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 47,807,536 இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 62,082,777 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை கீழே தரப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| அலுவலக உபகரணம் | 19,200 | 1,037,028 | 1,056,228 |
| சிவில் வேலைகள் | 130,000 | - | 130,000 |
| அதிகரிக்கும் மீண்டெழும் செலவினம் | 47,658,336 | 13,238,213 | 60,896,549 |
| மொத்தம் | 47,807,536 | 14,275,241 | 62,082,777 |

4.2 கட்டுநிதி கணக்கு

செயற்திட்டத்திற்காக 74129-173 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கு இலங்கை மத்திய வங்கியில் திறக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியால் சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 1.8 மில்லியன் தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

5.2 கணக்காய்விற்கான ஆவணரீதியான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் சப்பளம் பொழிப்புக்கள் கணக்காய்வு நோக்கத்திற்காக மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட ரூபா 28.2 மில்லியன் சம்பளங்களிற்கான விரிவான பதிவேடுகள் இன்மை காரணமாக வேதனங்கள் மற்றும் ஏனைய படிகளின் கணிப்பீடுகள் போன்றவற்றினை கணக்காய்வில் சான்றுறுதி செய்ய முடியவில்லை.

(ஆ) ரூபா 1,056,228 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொறி மற்றும் உபகரணங்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 5.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 09 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப் பாய்ச்சல் கூற்று முழு ஆண்டினதும் கொடுக்கல் வாங்கல்களிற்குப் பதிலாக மீளாய்வாண்டினது கடைசி இரண்டு மாதங்களின் உட்பாய்ச்சல்/ வெளிப்பாய்ச்சல்களை மாத்திரம் காட்டியிருந்தது.

# 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

## 6.1 நிதிப் பயன்பாடு

(அ) பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி செயற்திட்டத்தின் குறிக்கோள்களின் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்டத்தில் முழுக்காலத்தையும் மேவி மாதாந்த, காலாண்டு, அரையாண்டு போன்றவற்றில் நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டும் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ஐ.அ. டொலர் (மில்) | ரூபா (மில்) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 84 | 11,088 | 900 | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 28 | 3,696 | 400 | 48.48 | 0.47 | 63.14 |
| மொத்தம் | 112 | 14,784 | 1,300 | 48.48 | 0.47 | 63.14* |

* ஆண்டின் இறுதியில் செலுத்தவேண்டியவை மற்றும் பெறவேண்டியவை உள்ளடக்கப்பட்டிருக்காததால் இத்தொகையானது இந்த அறிக்கையின் பந்தி 4 இல் காட்டப்பட்ட தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை.

### 6.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 1.99 சதவீதம் மற்றும் 0.43 சதவீதமாக இருந்தது. செயற்திட்டத்தின் ஒவ்வொரு கூறிற்குமான செயலாற்றலின் முன்னேற்றம் பின்வருமாறு உள்ளன.

| செயற்திட்ட நடவடிக்கை/ செயற்திட்ட கூறு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் | |
|---|---|---|
| | இலக்கு | உள்ளபடியானது |
| | % | % |
| ஒழுக்கினைக் கண்டறியும் உபகரணம் வழங்கல் மற்றும் பொருத்துதல் மற்றும் வேறு தொடர்புபட்ட உபகரணங்கள் | 30 | 26 |
| பாய்ச்சல் மீற்றர்கள், அமுக்க மின்சமிக்ஞை மற்றும் மென்பொருள் வழங்கல் மற்றும் பொருத்தல், | 20 | 18 |
| வருமானமற்ற நீர் துறைக்கான குழு வாகனங்களை குழுக்களுக்கு வழங்குதல் | 30 | 27 |
| விநியோக முறைமையின் இடம்மாற்றல் மற்றும் மீள பொருத்துதலிற்காக குழாய்கள் வழங்கலும் பொருத்துதலும் (கொழும்பு வடக்கு) | 4 | 2 |
| விநியோக முறைமையின் இடம்மாற்றல் மற்றும் மீள பொருத்துதலிற்காக குழாய்கள் வழங்கலும் பொருத்துதலும் (கொழும்பு கிழக்கு) | 2 | 1 |
| வருமானமற்ற நீர் துறைக்கான பகுதி பொறியியல் அலுவலகத்தின் புனரமைப்பு | 2 | 0.4 |
| முகாமைத்துவ ஆலோசனை மற்றும் மேற்பார்வை | 6.9 | 4.5 |
| பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் தகவற்துறை ஆலோசனை | 2 | தொடங்கப் பட்டிருக்கவில்லை |
| இயலளவு அபிவிருத்தி | 2 | தொடங்கப் பட்டிருக்கவில்லை |

### 6.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

வழமையாக, செயற்திட்ட பதவியணியினருக்கான வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவில் பொது நிர்வாக நோக்கத்திற்காக போதிய பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் மேந்தலைகளின் 20 சதவீதம் அவற்றின் மீது சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன. ஆகவே, ரூபா 6.9 மில்லியனான மேந்தலைக் கிரயம் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட பெறுகைகளில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்டது.